முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண்.146/2026 இன் அ.வ.எண்.165/2004

புவனகிரி வர்த்தகர் சங்கம்
Represented by its
Secretary A.C.P. ரத்தின சுப்ரமணியன் ...... மனுதாரர்

/எதிர்/

1. ஸ்ரீராமன்

2. பொன்னாச்சி அம்மாள்

3. ராமதிலகம் (இறந்தார்)

4,வசந்தா

5. விஜயலட்சுமி

6. ருக்மணி

7. பட்டாபிராமன்

8. நவமணி

9. பத்மாவதி (இறந்தார்)

10. தரணி

11. புவனகிரி வர்த்தகர் சங்கம் புவனகிரி @ பூவராக சாமி
வர்த்தகர் சங்கம், புவனகிரி Represented by the
President R.ஸ்ரீராமன்

12. ஜெயராமன்

13. பரத்

14. R.பிரேமா

15) R. சத்தியஞானம் ..... எதிர்மனுதாரர்கள்

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று 16.04.2026 இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராஜேந்திரன் அவர்கள் அஜராகியும், 1 மற்றும் 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. E.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் இறந்த நிலையில், 2 , 4 முதல் 8 மற்றும் 10ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

மனு உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 7 விதி 14(3) ன் கீழ் நீதிமன்றத்தில் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-</u>

வழக்கு சொத்து சுவாதீனத்திற்காகவும் மற்றும் இதர பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் வக்கீல் வைத்து கட்சி செய்து வருகிறதாகவும், வழக்கானது இரு தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வழக்கு வாதுரைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும், தனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சில ஆவணங்கள் தேடிப்பார்த்தும், பதிவு அலுவலகத்தில் பெற்றும் கிடைக்கப்பட்டது என்றும், அவைகள் இவ்வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும், அவைகளை தாக்கல் செய்ய வேண்டும் என தனது வழக்கறிஞரால்

அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆவணங்கள் மூலமாக தனது கட்சி நிதிமன்றத்திற்கு தெளிவாக நிரூபிக்க முடியும் என்றும், ஆவணங்களின் மூலம் தனக்கு கூடிவரக்கூடிய கட்சிகள் இருந்து கொண்டிருக்கிறது என்றும், ஆவணங்கள் தேடிப்பார்த்ததிலும், பதிவு அலுவலகத்தில் தேடிப்பார்த்து நகல் பெறுவதிலும் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், அதனால் ஆவணங்களை உரிய காலத்தில் தன்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மற்றபடி வேண்டுமெனமோ, அலட்சியமாகோ இருந்துவிடவில்லை என்றும், ஆணங்களில் PW1 ஆகிய தன் மூலம் குறியீடு செய்ய வேண்டி இருக்கிறதாகவும், அதனால் வாதி ஆகிய தன் தரப்பில் முடிக்கப்பட்ட வழக்கு விசாரணையை Reopen செய்து கொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டியிருக்கிறதாகவும், ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு PW1 ஆகிய தன்னை Recall செய்ய வேண்டியிருக்கிறது என்றும், இல்லாவிடில் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு அனுமதிக்க வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆட்சேபணையின் சுருக்கம்:-</u>

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர், அசல் வழக்கில் வாதி தரப்பில் முடிக்கப்பட்ட வழக்கு விசாரணை Reopen செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கானது வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு வாதி தரப்பில் வாதுரை சமர்பிப்பததற்காக உள்ள நிலையில், மனுதாரர், வாதி தரப்பில் வழக்கு விசாரணை Reopen செய்வதற்கான உரிய காரணங்களும், வாதி தரப்பில் சமர்பிக்க வேண்டும் என்றும், ஆவணங்களின் விவரங்களும் குறிப்பிடப்படாமல் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி செயலானது இம்மனுவின் நோக்கினை வினவும் வகையில் அமைந்துள்ளது என்பதாலும், மனு தள்ளுபடிக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது, ஆணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு வாதுரைக்காக நிலுவையில் உள்ளது.

மனுதாரர், தனக்கு சில ஆவணங்கள் தேடிப்பார்த்தும், பதிவு அலுவலகத்திலிருந்தும் கிடைக்கப்பட்டது என்றும், வழக்கறிஞரிடம் காண்பித்தபோது ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமானவை என்று அறுவுறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்கும்படி

வேண்டப்பட்டநிலையில் **மாறாக**, மனு சங்கதிகள் உண்மையல்ல என்றும், அசல் வழக்கானது வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு வாதி தரப்பில் வாதுரை சமர்பிப்பததற்காக உள்ள நிலையில், மனுதாரர், வாதி தரப்பில் வழக்கு விசாரணை Reopen செய்வதற்கான உரிய காரணங்களும், வாதி தரப்பில் சமர்பிக்க வேண்டும் என்றும், ஆவணங்களின் விவரங்களும் குறிப்பிடப்படாமல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், செயலானது மனுவின் நோக்கினை வினவும் வகையில் அமைந்துள்ளதாலும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளததை கருத்தில் கொண்டு பரிசீலினை செய்ததில், சட்ட பிரிவின்படியும், receving of document is different from marking of documents என்பதை கருத்தில் கொண்டும், சட்ட பிரிவின்படியும், வழக்கில் மனுதாரருக்கு அசல் வழக்கில் தரப்பினை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பளிக்கும் முகமாகவும், விசாரணையின் போது ஆவணங்களை குறியீடு செய்யும்போது எதிர்தரப்பு ஆட்சேபனை செய்யும் பட்சத்தில் ஆட்சேபனையுடன் ஆவணங்களின் ஏற்புடைய தன்மையை கவனத்தில் கொண்டும் நீதிமனறம் குறியீடு செய்வதால் ஆவணங்களை பெற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரக்கு பாதகம் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் மனுதாரரின் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும், இந்த மனுவினை அனுமதிப்பதால் மட்டுமே ஆவணத்தை ஏற்றுக்கொண்டதாக கருத இயலாது என்றும், ஆவணத்தை குறியீடு செய்வது என்பது விசாரணை சமயத்தில் அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு ஏற்புடையதா? மற்றும் ஆவணத்தின் நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவற்றினை பொருத்தே அமையும் என்றும்

இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு நீதியின் நலன் கருதி விடை காண்கிறது. மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை **subject to admissibility** அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**7.** முடிவாக, இம்மனு ஆவணங்களை ஏற்கும் தன்மை பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.146/2026

இன்

அ.வ.எண்.165/2004

நாள்.18.04.2026